ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்:dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்:www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | **20.08.2019** |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2019 யூன்

### முக்கிய பண்புகள்

- வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்தின் காரணமாக 2019 யூனில் வெளிநாட்டுத் துறை மேலும் வலுவடைந்த வேளையில் நாட்டிற்கான இரு பன்னாட்டு முறிகளின் வழங்கலிலிருந்தான பெறுகைகளின் காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் பெருமளவிற்கு அதிகரித்தன.

- 2019 யூனில், வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 316 மில்லியன்களுக்கு குறுக்கமடைந்தது. இது, 2010 ஒத்தோபருக்குப் பின்னர் ஏற்பட்ட மிகக்குறைந்ததொரு அளவாகும்.

- இக்குறிப்பிடத்தக்க குறைப்பிற்கு இறக்குமதிச் செலவினம் 23.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையும் ஏற்றுமதி வருவாய்கள் 5.8 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தமையுமே காரணமாகும்.

- உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் தாக்கத்திலிருந்து படிப்படியாக மீட்சியடைந்து சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் யூனில் உயர்வடைந்தன. சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2019 மேயுடன் ஒப்பிகையில் 2019 யூனில் 66.8 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2019 யூனில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 57.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

- 2019 யூனில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 537 மில்லியன்களாக விளங்கி 2.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் (ஆண்டிற்கு ஆண்டு) பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019 முதலரைப்பகுதியில் 3,270 மில்லியன்களாக விளங்கின.

**இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டுவருகிறது. இதனை புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு என்பனவற்றின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**

https://www.cbsl.gov.lk/ta/node/6181

- நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலிலிருந்து கிடைத்த பெறுகைகளுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 8.9 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 5.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும்.

**அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)**

| வகை | யூன் 2018 ஐ.அ.டொ. மில் | யூன் 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-யூன் 2018 ஐ.அ.டொ. மில் | சன-யூன் 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,024 | 1,084 | 5.8 | 5,732 | 5,999 | 4.7 |
| இறக்குமதிகள் | 1,819 | 1,400 | -23.1 | 11,441 | 9,596 | -16.1 |
| வர்த்தக மீதி (தேறிய) | -795 | -316 | | -5,709 | -3,597 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 276 (ஆ) | 118 (இ) | -57.0 | 2,186 (ஆ) | 1,893 (இ) | -13.4 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 524 (ஈ) | 537 | 2.5 | 3,624 (ஈ) | 3,270 | -9.8 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 0.3 | 10 | | 53 | -10 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 185 | 2,167 | | 3,874 | 5,526 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 48 | 49 | | 553 | 376 | |
| நீண்ட காலக் கடன்கள் | 137 | 118 | | 821 | 750 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | 2,000 | | 2,500 | 4,400 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | 252 | - | | 252 | 164 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (ஊ) | | | | 336 | 262 | |
| திரண்ட நிலுவை | | | | 1,148 | 1,827 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது.

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2019 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது

(உ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது.

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- 2019 யூனில் வர்த்தகக் கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறை 2018இன் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமைக்கு உந்து ஊர்திகள் மற்றும் தங்கத்தின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பே முக்கிய காரணமாகும். ஒன்றுசேர்ந்த அடிப்படையில், வர்த்தக் கணக்கின் மீதி 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019 முதல் ஆறுமாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர். 2,112 மில்லியன்களினால் ஐ.அ.டொலர் 3,597 மில்லியன்களுக்கு சுருக்கமடைந்தது.

- அதேவேளை, ஏற்றுமதிகளின் நியதிகளில் இறக்குமதிகளின் ஒப்பீட்டு ரீதியான விலைகளைப் பிரதிபலிக்கின்ற வர்த்தக மாற்று விகிதம், சராசரியாக ஏற்றுமதி விலைகள் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியிலும்

பார்க்க மெதுவான வேகத்தில் குறைவடைந்தமையின் காரணமாக 2019 யூனில் 114.0 சுட்டெண் புள்ளிகளுக்கு (ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில்) 3.6 சதவீதத்தினால் மேம்பட்டன. எனினும், 2019இன் முதல் ஆறுமாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில், வர்த்தக மாற்று விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 1.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**வரைபடம் 1: மாதாந்தவர்த்தகப் பற்றாக்குறை (2018– 2019)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: வர்த்தக மாற்று விகிதம் (2018– 2019)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- 2019 யூனில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்து 28ஆவது மாதமாக அதிகரித்து ஐ.அ.டொலர் 1,084 மில்லியன்களுக்கு 5.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்தமைக்கு (ஆண்டிற்கு ஆண்டு) கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய ஆதரவினை வழங்கியது.

- 2019 யூனில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களின் மேம்பட்ட செயலாற்றமே முக்கிய காரணமாகும். 2019 யூனில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 11.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகள் இரண்டிலுமிருந்து ஆடை ஏற்றுமதிகளுக்கு ஏற்பட்ட உயர்ந்த கேள்வியே காரணமாக அமைந்தது. ரயர்கள், அறுவைச் சிகிச்சை மற்றும் ஏனையவற்றிற்கான கையுறைகளின் சிறந்த செயலாற்றம் காரணமாக இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்த வேளையில், யப்பானிற்கான கப்பல் போக்குவரத்துக் கலத்தின் வழங்கலை குறிப்பிடத்தக்களவிற்குப் பிரதிபலிக்கின்ற விதத்தில் போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன. எனினும், 2019 யூனில் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் பொறிகள் மற்றும் எந்திர சாதனங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018 யூனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன.

- 2019 யூனில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு தேயிலை, இறப்பர், வாசனைத்திரவியங்கள் மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2019 யூனில் தேயிலையிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு ஆண்டிற்கு ஆண்டு தாழ்ந்த விலைகளே முக்கிய காரணமாகும். எனினும், தெங்கு, கடலுணவு மற்றும் காய்கறிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2019 யூனில் அதிகரித்தன.

- 2019 யூனில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் 2018 யூனுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன.
- 2019 யூனில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 6.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகு பெறுமதிச் சுட்டெண் 0.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2018 யூனுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முழுவதும் அதிகரித்த அளவின் மூலமே பெறப்பட்டது என்பதனை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 3: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | யூன் 2018 ஐ.அ.டொ. மில். | யூன் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-யூன் 2018 ஐ.அ.டொ. மில். | சன-யூன் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **800.7** | **875.4** | **9.3** | **4,433.7** | **4,728.6** | **6.7** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 38.7 | 31.0 | (19.9) | 232.3 | 233.4 | 0.5 |
| விலங்குத்தீன் | 8.5 | 19.4 | 127.7 | 54.2 | 70.7 | 30.6 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 453.5 | 505.3 | 11.4 | 2,519.0 | 2,761.4 | 9.6 |
| இதில் ஆடைகள் | 419.4 | 472.3 | 12.6 | 2,350.8 | 2,570.8 | 9.4 |
| புடவைகள் | 25.7 | 23.4 | (9.1) | 120.6 | 138.0 | 14.4 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.3 | 9.7 | 16.5 | 47.5 | 52.6 | 10.8 |
| இறப்பர் உற்பத்திகள் | 77.3 | 79.1 | 2.3 | 426.4 | 442.1 | 3.7 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 21.7 | 19.9 | (8.3) | 151.4 | 151.0 | (0.3) |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 45.0 | 34.4 | (23.6) | 219.9 | 206.5 | (6.1) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 8.5 | 67.6 | 690.4 | 51.0 | 107.2 | 110.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 52.7 | 35.6 | (32.6) | 272.0 | 241.9 | (11.1) |
| இரசாயன உற்பத்திகள் | 15.2 | 15.5 | 1.8 | 81.8 | 87.9 | 7.5 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 12.4 | 10.8 | (13.4) | 70.4 | 70.7 | 0.5 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 3.8 | 1.9 | (49.5) | 10.2 | 23.3 | 128.8 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 12.5 | 8.9 | (28.6) | 77.5 | 58.1 | (25.1) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.7 | 6.0 | (11.1) | 38.6 | 36.3 | (5.8) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 15.1 | 13.8 | (8.7) | 77.0 | 90.7 | 17.7 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.8 | 2.8 | (0.1) | 14.7 | 14.1 | (4.0) |
| ஏனையவை | 26.1 | 23.5 | (9.9) | 137.3 | 133.1 | (3.0) |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **219.4** | **204.5** | **(6.8)** | **1,272.3** | **1,245.1** | **(2.1)** |
| தேயிலை | 129.6 | 113.2 | (12.7) | 728.9 | 684.9 | (6.0) |
| இறப்பர் | 2.2 | 1.7 | (23.5) | 18.7 | 15.0 | (20.0) |
| தேங்காய் | 25.0 | 29.3 | 17.1 | 150.1 | 173.2 | 15.4 |
| வாசனைத்திரவியங்கள் | 27.7 | 24.5 | (11.6) | 149.7 | 143.6 | (4.1) |
| காய்கறிகள் | 1.8 | 2.3 | 30.1 | 12.6 | 16.0 | 27.0 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.5 | 3.5 | 0.7 | 16.8 | 16.6 | (1.4) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 10.6 | 8.6 | (19.5) | 62.1 | 52.3 | (15.9) |
| கடலுணவு | 18.9 | 21.4 | 13.1 | 133.4 | 143.6 | 7.6 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **3.2** | **2.8** | **(9.9)** | **16.7** | **16.7** | **0.3** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.1** | **1.2** | **12.1** | **9.2** | **8.8** | **(4.2)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,024.4** | **1,084.0** | **5.8** | **5,731.9** | **5,999.2** | **4.7** |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் தொடர்ந்து எட்டாவது மாதமாகச் சுருக்கமடைந்து, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், ஐ.அ.டொலர் 1,400 மில்லியனுக்கு 23.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இறக்குமதிகளின் அனைத்து மூன்று முக்கிய வகைகளான நுகர்வுப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்கள் என்பன 2019 யூனில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன.

- 2019 யூனில் நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 39.4 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு உணவல்லா நுகர்வுப் பொருட்களின் அனைத்து துணைவகைகளினதும் குறிப்பாக தனியாள் உந்து ஊர்திகளின் குறைந்த இறக்குமதிகளே காரணமாக விளங்கியது. தனிப்பட்ட உந்து ஊர்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருவது கலப்பு வலு மற்றும் மின்வலு உந்து ஊர்திகள், 1000சிசி எந்திர இயலளவிற்கு குறைவான உந்து ஊர்திகள் என்பனவற்றின் இறக்குமதிகள் மீது 2019 மாச்சில் அறிமுகப்படுத்தப்பட்ட கலால் தீர்வைகளின் மேல்நோக்கிய திருத்தத்தின் தாக்கத்தினை முக்கியமாக பிரதிபலிப்பதாக இருக்கிறது. உணவு மற்றும் குடிபான இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்து கடலுணவு, தானியம் மற்றும் அரைக்கும் கைத்தொழில் உற்பத்திகள் நீங்கலாக பெரும்பாலும் மற்றைய அனைத்து வகைகளிலும் ஏற்பட்ட குறைந்த செலவினத்தைப் பிரதிபலித்தது.

- 2019 யூனில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 11.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த எரிபொருள் இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். மசகுஎண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் இரண்டும் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த இறக்குமதி அளவுகள் மற்றும் விலைகள் இரண்டினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். இறக்குமதிகள் குறைவடைவதற்கு புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், வளமாக்கி, இரசாயன உற்பத்திகள், உணவுத் தயாரிப்புக்கள் மற்றும் தாள் மற்றும் தாள் அட்டைகள் என்பனவற்றின் குறைந்த இறக்குமதிகளும் பங்களித்தன. எனினும், 2019 யூனில் அடிப்படை உலோகங்களின் இறக்குமதிகள் அதிகரித்தன.

- 2019 யூனில் முதலீட்டுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமைக்கு அனைத்து துணை வகைகளினதும் குறைந்த இறக்குமதிகளே காரணமாகும். கட்டவாக்கப் பொருட்களின் இறக்குமதிகள் குறைவடைந்தமைக்கு இரும்பு, உருக்கு மற்றும் சீமெந்து இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்த வேளையில் போக்குவரத்துச் சாதனங்கள் குறைவடைந்தமைக்கு வர்த்தக ரீதியான வாடகை ஊர்திகள், முச்சில்லு வண்டிகள் போன்ற குறிப்பிட்ட வகை ஊர்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாக அமைந்தது.

- 2018 யூனுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 19.8 சதவீதத்தினாலும் அலகுப்பெறுமதிச் சுட்டெண் 4.0 சதவீதத்தினாலும் குறைவடைந்து, அளவுகள் மற்றும் விலைகள் இரண்டிலும் ஏற்பட்ட குறைப்பினால் இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகிறது.

**வரைபடம் 5: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6:இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | யூன் 2018 ஐ.அ.டொ. மில். | யூன் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-யூன் 2018 ஐ.அ.டொ. மில். | சன-யூன் 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **425.9** | **258.1** | **(39.4)** | **2,620.7** | **1,811.0** | **(30.9)** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 125.8 | 97.7 | (22.4) | 907.1 | 689.9 | (23.9) |
| தானியங்கள் மற்றும் அரைக்கும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.9 | 2.1 | 10.6 | 109.7 | 16.3 | (85.1) |
| இதில் அரிசி | 0.5 | 0.5 | 0.6 | 100.1 | 5.9 | (94.1) |
| பால் உற்பத்திகள் | 28.8 | 17.5 | (39.4) | 166.7 | 151.6 | (9.1) |
| காய்கறிகள் | 28.3 | 23.3 | (17.9) | 170.0 | 141.3 | (16.9) |
| குடிபானங்கள் | 9.7 | 5.6 | (42.5) | 43.0 | 41.5 | (3.6) |
| வாசனைத்திரவியங்கள் | 8.2 | 5.9 | (27.3) | 51.9 | 50.1 | (3.5) |
| கடலுணவு | 10.6 | 15.1 | 41.9 | 104.6 | 107.3 | 2.5 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 22.6 | 19.3 | (14.6) | 152.9 | 104.3 | (31.7) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 15.6 | 8.9 | (43.0) | 108.2 | 77.5 | (28.4) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 300.1 | 160.5 | (46.5) | 1,713.7 | 1,121.1 | (34.6) |
| தனியாள் ஊர்திகள் | 146.8 | 48.1 | (67.2) | 812.7 | 324.2 | (60.1) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 48.3 | 38.4 | (20.5) | 258.8 | 249.2 | (3.7) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 24.8 | 14.3 | (42.4) | 141.4 | 115.1 | (18.6) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 18.3 | 12.2 | (33.2) | 120.0 | 97.6 | (18.7) |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 24.6 | 18.3 | (25.5) | 165.1 | 134.2 | (18.7) |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 13.4 | 12.2 | (8.8) | 84.1 | 75.3 | (10.5) |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 23.9 | 16.9 | (29.4) | 131.6 | 125.6 | (4.6) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **947.4** | **842.6** | **(11.1)** | **6,319.9** | **5,546.4** | **(12.2)** |
| எரிபொருள் | 342.7 | 284.5 | (17.0) | 2,093.6 | 2,001.0 | (4.4) |
| இதில் மசகெண்ணெய் | 111.8 | 92.5 | (17.2) | 431.3 | 491.3 | 13.9 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 228.1 | 192.0 | (15.8) | 1,515.2 | 1,384.5 | (8.6) |
| நிலக்கரி | 2.8 | 0.0 | (99.2) | 147.1 | 125.2 | (14.9) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 8.5 | 6.9 | (18.9) | 495.2 | 88.1 | (82.2) |
| இதில் தங்கம் | 0.4 | 0.1 | (72.9) | 437.8 | 1.6 | (99.6) |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 230.9 | 226.6 | (1.9) | 1,360.5 | 1,394.8 | 2.5 |
| இரசாயன உற்பத்திகள் | 72.0 | 61.4 | (14.8) | 446.0 | 411.5 | (7.7) |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 52.8 | 45.5 | (13.9) | 353.0 | 289.9 | (17.9) |
| ஊர்திகள் மற்றும் எந்திர உதிரிப்பாகங்கள் | 22.9 | 18.6 | (18.8) | 152.0 | 133.8 | (12.0) |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 45.1 | 31.6 | (30.0) | 250.4 | 211.3 | (15.6) |
| அடிப்படை உலோகங்கள் | 43.4 | 60.8 | 40.3 | 289.1 | 277.5 | (4.0) |
| கோதுமை மற்றும் சோளம் | 18.1 | 32.7 | 80.7 | 193.0 | 143.4 | (25.7) |
| வளமாக்கி | 20.6 | 8.2 | (60.4) | 121.2 | 93.4 | (22.9) |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 22.8 | 16.3 | (28.6) | 126.5 | 108.8 | (14.0) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 26.8 | 12.4 | (53.9) | 162.3 | 116.9 | (27.9) |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 40.7 | 37.1 | (8.8) | 277.2 | 276.0 | (0.4) |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **443.5** | **299.0** | **(32.6)** | **2,432.4** | **2,235.6** | **(8.1)** |
| பொறி மற்றும் கருவிகள் | 195.6 | 176.8 | (9.6) | 1,263.9 | 1,232.4 | (2.5) |
| கட்டடப் பொருட்கள் | 117.2 | 98.6 | (15.8) | 759.2 | 725.5 | (4.4) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 130.4 | 23.3 | (82.1) | 406.0 | 274.5 | (32.4) |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.3 | 0.3 | 3.1 | 3.3 | 3.2 | (3.0) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **2.7** | **0.1** | **(94.6)** | **68.0** | **3.0** | **(95.6)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,819.5** | **1,399.8** | **(23.1)** | **11,441.1** | **9,596.0** | **(16.1)** |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- 2019 யூனில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் தாக்கத்திலிருந்து படிப்படியாக மீட்சியடைந்தன. இதன்படி, 2019 யூனில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019 மேயின் 37,802 உடன் ஒப்பிடுகையில் 63,072 இற்கு 66.8 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2019 யூனில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 57.0 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை உடனடுத்து இந்தியா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். இந்தியா மற்றும் சீனாவிலிருந்தான வருகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி 2019 யூனில் ஏற்பட்ட மொத்த வீழ்ச்சியில் 41.6 சதவீதத்திற்கு வகைகூறின.
- 2019 யூனில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018 யூனின் ஐ.அ.டொலர் 276 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 118 மில்லியன்களாக மதிப்பிடப்பட்டது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2019இன் முதல் ஆறுமாத

காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,186 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,893 மில்லியன்களாக மதிப்பிடப்பட்டது.

- அதேவேளை, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019 யூனில் ஐ.அ.டொலர் 537 மில்லியன்களுக்கு 2.5 சதவீத்தினால் அதிகரித்தது. எனினும், ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019 முதலரைப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,270 மில்லியன்களை அடைந்து 9.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 7: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள் (யூன்)**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 8: சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2019 யூனில் அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 5 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், ஆண்டின் முதலரைப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையின் தேறிய வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 96 மில்லியனாக விளங்கின.

- முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2019 யூன் மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 10 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019 முதலரைப் பகுதியில் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தையின் கொடுக்கல்வாங்கலை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஐ.அ.டொலர் 10 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன.

- மேலும், அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2019 யூன் மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 99 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2019 யூன் இறுதில் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 2 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகளுடன் சேர்ந்து நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் 2019 மே இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.7 பில்லியனிலிருந்து 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 8.9 பில்லியனுக்கு அதிகரித்தது. (5.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானது) அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த

வெளிநாட்டுச் சொத்துக்கள் 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 11.5 பில்லியனாக விளங்கி 6.8 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

**வரைபடம் 9: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2019 ஓகத்து 20ஆம் திகதி வரையான இவ்வாண்டுப்பகுதியில், ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 3.0 சதவீதத்தினால் உயர்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபா, யப்பானிய யென் தவிர்ந்த ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் உயர்வடைந்தது.

**வரைபடம் 10: ஐ.அ.டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 ஓகத்து 20 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +3.0% |
| யூரோ | -12.7% | +6.3% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | +7.7% |
| யப்பானிய யென் | -18.1% | -0.6% |
| கனேடியன் டொலர் | -9.3% | +0.7% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +7.2% |
| இந்தியன் ரூபா | -8.7% | +5.3% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி